

# மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை



## ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை கட்டுப்பாட்டிலுள்ள நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல்



ஊர்பொதுமக்கள்

வடகிழக்கு பருவ மழையால் பல வருடங்களுக்கு பிறகு குளங்கள் நிரம்பியுள்ளன. பல வருடங்களாக, குளங்களில் நீர் இல்லாத காரணத்தால் மீன்பாசி குத்தகைக்கும் போகவில்லை, எனவே, இந்த வருடத்தில் நீர் நிரம்பியுள்ளதால், எங்கள் கிராமத்திலுள் பஞ்சாயத்து குளத்தில் விட மீன்குஞ்சுகள் இலவசமாக அரசு வழங்குகிறதா? அவ்வாறு வழங்கினால் எங்கள் மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்

ஆம். தற்சமயம், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை கட்டுப்பாட்டிலுள்ள நீர்நிலைகளில் ஒரு ஹெக்டேருக்கு ரூ.2000 என்ற வீதத்தில், தரமான மீன்குஞ்சுகள் இருப்பு செய்ய மொத்தம் ரூ 75 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஊராட்சி குளங்களில் மீன் உற்பத்தி அதிகரிப்பது மட்டுமில்லாமல், ஊராட்சியில் வருவாயினை அதிகரிக்க செய்யும். மேலும், கிராமப்புற மக்களுக்கு புரதச்சத்து நிறைந்த மீன்கள் குறைந்த விலையில் கிடைக்க வழி வகை ஏற்படும்.



மீன்வள ஆய்வாளர்

மிகவும் நல்ல திட்டம் போல் தெரிகிறதே..... கூடுதல் விவரங்களை எங்கு பெறுவது ஐயா?





நம்முடைய மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி கூடுதல் விவரங்களை பெற்று கொள்ளுங்கள். அவர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.



நன்றி ஐயா!!!
நாங்கள் உடனே செல்கிறோம் ...

